மூலமாக 428 முழுநேரக் கடைகளும், 861 பகுதிநேரக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்று கோருகிறார். அவசியம் ஏற்படுமானால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த இடத்தினுடைய சூழ்நிலையைக் கருதி, அந்தக் கடையைத் திறந்து கொடுப்பதற்கு வாய்ப்பும், வசதியும் சட்டத்தில் இடமும் இருக்கின்றது. அதாவது, பழங்குடியினர் நலன் மற்றும் இன மோதல்களால் சட்டம்-ஒழுங்கு பாதிக்கக்கூடும் என்ற சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே சூழ்நிலைக்கேற்றவாறு புதிய நியாய விலைக் கடை அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்கலாம். அதேநேரத்தில், மேற்படி நிபந்தனைகள் பூர்த்தியாகாத சூழ்நிலையில், நம்முடைய மாநில உணவுப்பொருள் துறை ஆணையாளர்மூலம் முன்மொழிவு பெற்று, அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, அவருடைய கோரிக்கையைக் கருதும்பட்சத்தில், அந்தக் கடையைத் திறப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா; மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

155—

தொழில் மையம்

*24007—திரு. டி.ஆர்.பி. ராஜா:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர்ப் பகுதியில் சிப்காட் தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தொழில் துவங்க வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிந்து, குறிப்பாக, அங்கு தொழில் துவங்க தொழில்முனைவோரின் நிலத் தேவை மற்றும் கட்டமைப்பு வசதிகளான தண்ணீர், மின்சாரம் மற்றும் போக்குவரத்து போன்றவற்றை அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் அனைத்தையும் ஆராய்ந்த பிறகு சிப்காட் வளாகம் ஏற்படுத்தப்படும்.

ஆனால், அங்கு விளைநிலங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சிப்காட் தொழில் மையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கும்பகோணம், வேதாரண்யம் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய ஊர்களுக்கு மையப் பகுதியாக மன்னார்குடி விளங்குகிறது. அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் ஏராளமான டிப்ளமோ, ஐ.டி.ஐ., பொறியியல் மற்றும் பட்டயப் படிப்புகள் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினால், சென்னை, கோவை மற்றும் திருப்பூர் போன்ற நகரங்களுக்கு வேலை தேடி அலைய வேண்டிய சூழ்நிலை உள்ளது. பல இளைஞர்கள், அண்டை மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்குங்கூட சென்று வேலை தேட வேண்டிய சூழ்நிலை உள்ளது. படித்த இளைஞர்கள் அவர்களது குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு, அவர்தம் ஊர்களிலேயே வேலை செய்திட, வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவது அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். ஆகவே, இப்பகுதியிலுள்ள இளைஞர்கள் மிகத் தொலைவிலுள்ள அரசு தொழிற்பேட்டைகளுக்கு வேலை தேடிச் செல்லாமல் இருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கள் மன்னார்குடிப் பகுதியிலேயே ஒரு தொழில் மையத்தைத் தொடங்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கித் தவிக்கும் இளைஞர்களுக்கு உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் நிலம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளிலேயே நிலம் உள்ளது. தேவைப்பட்டால், தங்களிடம் நேரடியாகவே எழுதிக் கொடுக்கிறேன். அப்பகுதியானது விவசாயம் சார்ந்த பகுதியாக இருப்பதனால், அப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு மானியம் மற்றும் இதர சலுகைகளை வழங்கி, விவசாயம் சார்ந்த சிறு, குறு தொழிற்சாலைகளை அமைக்க அரசு ஏதாவது உதவி செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிலம் இல்லையென்று சொல்லவில்லை. விளைநிலங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சிப்காட் தொழில் மையம் அமைக்க இயலாது என்று சொன்னேன். ஏனென்றால், சிப்காட் தொழில் மையம் புன்செய் நிலமும், தரிசு நிலமுமாக இருக்கின்ற பகுதியில் மட்டும்தான் அமைக்கப்படும். அங்கே விளைநிலங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் சிப்காட் தொழில் மையம் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் இருக்கிறதென்று சொல்கிறார்கள். தரிசு நிலமாக இருந்தால், தொழில்முனைவோர் அங்கே தொழில் மையம் அமைப்பதற்கு முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எந்தெந்தப் பகுதிகளில் சிப்காட் தொழில் மையங்கள் தேவையோ அங்கெல்லாம் அமைப்பதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, படித்த இளைஞர்கள் நிறைய இருக்கின்றார்கள், வேறு மாவட்டங்களுக்கு வேலை தேடிச் செல்கிறார்கள் என்று சொன்னார்கள். தொழில் முனைவோர் முன்வருகிறார்கள் என்று சொன்னால், அங்கே சிப்காட் தொழில் மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழில் மையம் அமைப்பதற்கு எத்தனை ஏக்கர் நிலம் தேவைப்படும் என்பதையும், எத்தனை தொழில் முனைவோர் அங்கே முன்வர வேண்டும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழில் மையம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 500 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதற்குமேல் எவ்வளவு நிலம் இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே சிப்காட் தொழில் மையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், மன்னார்குடிக்கு அருகிலுள்ள கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏற்கெனவே சிப்காட் வளாகம் இயங்கி வருகின்றது. அங்கே இடம் காலியாக இருக்கின்றது. தொழில் முனைவோர் முன்வருவார்களென்று சொன்னால், அந்த இரண்டு வளாகங்களிலும் அவர்களுக்கு இடம் ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களையும் தாண்டி, தொழில் துறையில் தன்னிகரற்ற நிலைக்கு தமிழகத்தினை உயர்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தென் தமிழகத்தை தொழில்மயமாக்கிடவும் மதுரை-தூத்துக்குடியில் தொழில் பாதையை உருவாக்கிடவும், 9 சிறப்பு*

தொழில் பூங்காக்களை உருவாக்கிடவும், தொழில் வளர்ச்சிக்கு உயிர் கொடுத்திட, சிப்காட்டின்கீழ் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் - Special Purpose Vehicle உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது தொடங்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால், எப்போது தொடங்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தூத்துக்குடியில் Industrial Corridor அமைப்பதற்கான D.P.R. முடிந்துவிட்டது. நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது SPV ஏற்படுத்துவதற்காக நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். கூடிய விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே சிறப்பு நோக்கு நிறுவனம் ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

156—

சொகுசுப் பேருந்து

*33187—டாக்டர் ச. துரையப்பா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூரிலிருந்து திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.